# இந்தியா இலங்கையில் 27,000 வீடுகளை நிர்மாணித்துள்ளது

2014ம் ஆண்டில் இந்திய வீடமைப்புத்திட்டத்தின் இலக்கான 16,000 வீடுகளின் நிர்மாணப் பணிகள் பூர்தி செய்யப்பட்டதுடன் இலங்கைக்கான இந்திய வீ மைப்புத் திட்டம் அபரிதமான முன்னேற்றத்தைத் தொட ர்ந்து அடை ந்து கொண்டிருக்கின்றது. இந்த முக்கியமான மைல் கல்லை அடையப்பெற்ற சாதனையுடன் இத்திட்டத்தின் கீழ் இதுவரை மொத்தமாக 27,000 வீடுகள் நிர்மாணிக்கப்பட்டு அல்லது புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் கீழ் 2014ம் ஆண்டில் வடமாகாணத்தில் 14555 வீடுகளும் கிழக்கு மாகாணத்தில் 1447 வீடுகளும் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. இதற்கு மேலதிகமாக 162 வீடுகள் வட மாகாணத்தில் புனரமைக்கப்பட்டுள்ளன.

2012 ஜூன் மாதத்தில் இலங்கை ஜனாதிபதி கௌரவ மகிந்த ராஜபக்ஷ அவர்களின் இந்திய விஜயத்தின்போது போருக்குப் பின்னரான புனரமைப்பு முயற்சிகளின் ஒரு பகுதியாக இலங்கையில் 50,000 வீடுகளை அமைத்துக் கொடுப்பதாக இந்திய அரசு அறிவித்தது. இத்திட்டத்திற்காக இந்திய அரசு 250 மில்லியன் அமெரிக்க டொலர்களை (கிட்டத்தட்ட இலங்கை ரூபா 30 மில்லியன்) நன்கொடை உதவியாக வழங்கியுள்ளது. இது இந்தியாவால் வெளி நாடுகளில் முன்னெடுக்கப்படும் பாரிய நன்கொடை உதவித் திட்டங்களில் ஒன்றாகும்

இத்திட்டத்தின் முன்னோடியான முதற்கட்டமாக வட மாகாணத்திலுள்ள பயனாளிகளுக்கு முகவர் மூலமாக இந்திய அரசு 1000 வீடுகளை அமைத்துக் கொடுத்தது. இதன் இரண்டாம் கட்டமாக 2012 ஒக்ரோபர் 2ம் திகதியான மகாத்மா காந்தியின் பிறந்த நாள் ஆண்டு விழா தினத்தன்று வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் 45,000 வீடுகளை அமைக்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இத்திட்டத்தின் இரண்டாம் கட்டத்தின் முக்கிய அம்சமாக புதிய மாறுதலான உரிமையாளர் ஊக்குவிப்புத் திட்டம் செயற்படுத்தப்படுகின்றது. இதற்கமைய இந்திய அரசாங்கத்தினால் வழங்கப்படும் தொழில் நுட்ப மற்றும் நிதி உதவியுடன் உரிமையாளரான பயனாளிகள் வீட்டின் நிர்மாணத்தை அல்லது புனரமைப்பைத் தாங்களாகவே மேற்கொள்வர். இதன்படி ஒவ்வொரு பயனாளிக்கும் நிதி உதவியாக இலங்கை ரூபாய் 550,000 (புனரமைப்புக்காக இலங்கை ரூபாய் 250,000) வழங்கப்படுகின்றது. இந்த நிதி உதவி இந்திய உயர் ஸ்தானிகராலயத்தால் கட்டம்

கட்டமாக பயனாளிகளின் வங்கிக் கணக்கில் நேரடியாக வைப்புச் செய்யப்படுகின்றது. இத்திட்டம் இலங்கை அரசாங்கத்தினதும் மற்றும் இதில் சம்பந்தப் பட்டோரினதும் ஆலோசனைக்கமைய அமுல்படுத்தப்படுவதுடன், பயனாளிகளின் தேர்வு மற்றும் அவர்களுக்கான கொடுப்பனவு முறைகளில் உயர் தரத்திலான வெளிப்படைத்தன்மை மற்றும் பாரபட்சமின்மை ஆகியன கடைப்பிடிக்கப்படுகின்றன.

இரண்டாம் கட்டத்தில் 26,000 வீடுகளுக்கான நிர்மாணப் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டதுடன் 'இத்திட்டத்தின் கீழ் மேலும் 19,000 வீடுகள் நிர்மாணம் அல்லது புனரமைப்புச் செய்யப்படவுள்ளன. அவை 2015ம் ஆண்டின் இறுதியில் பூர்த்தி செய்யப்படுமென எதிர் பார்க்கப்படுகின்றது.

அவற்றுடன் இந்திய வீடமைப்புத் திட்டத்தின் மூன்றாம் கட்டமான மத்திய மற்றும் ஊவா மாகாணங்களிலுள்ள பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்காக நிர்மாணிக்கப்படவிருக்கும் 4,000 வீடுகளுக்கான ஆயத்தப் பணிகள் ஏற்கெனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் அவற்றின் முறையான நிர்மாணப் பணிகள் 2015 நடுப்பகுதியில் ஆரம்பிக்கப்பட எதிர்பார்க்கப்படுகின்றது.

**1 ஜனவரி 2015**
**கொழும்பு**